**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்**

*அசல் வழக்கு எண்.* **939/2023**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய 2–வது நபரின் வாக்குமூலம் 1896–ஆம் ஆண்டு 44 வது விதியின் ஏற்பாட்டின் திரு.சி.ப.முல்லைவாணன்,பி.ஏ.,பி.எல்., (Hons) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நீதிபதி, பல்லாவரம் ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேகர் |
| த/பெ, க/பெ | : | கண்ணையன் |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |

**முதல் விசாரணை – வா.சா. 2**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதுதான்.

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

1. வழக்கு விபரம் மற்றும் தாவாசொத்தின் விபரம் ஆகியவை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 60 சென்ட் ஆகும். தாவாசொத்தின் பைமாஸ் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை யார் யாருடைய பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் வெங்கட்ராமன் ஐயர் என்பவர் எங்களது ஊருக்காக அச்சொத்தை எழுதி கொடுத்தார் அதனை களத்து மேடாக பயன்படுத்தி வந்தோம். மேற்படி சொத்தானது வெங்கட்ராம ஐயர் களத்து மேடாக பயன்படுத்த எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு வெங்கட்ராமன் ஐயர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இருந்தது அதன் பட்டா எண் எது என்றால் 52 ஆகும். எந்த வருடம் வெங்கட்ராம ஐயர் அதனை எழுதிக் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. வெங்கட்ராம ஐயர் சொத்தை கிரயமாக கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியாது. அந்த காலத்தில் அவர் எழுதிக்கொடுத்தார். அதனால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் 1987 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தீர்ப்பு

பெற்றுள்ளதாக சொல்லி உள்ள நிலையில் அவ்வழக்கு யாருக்கு எதிராக தொடுக்கப்பட்டு தீர்ப்பு தரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ் வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மின்சார துறைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நல சங்கமும் தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்த நல சங்கமும் ஒரே சங்கம் என்றால் அது பற்றி தெரியாது.

3.தாவா வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கு தாக்கல் செய்துள்ள சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு விபரங்கள் வாதி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவ்வழக்கில் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் பிரதிவாதி தரப்பில் என்ன எதிர்க்கட்சி எடுத்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தரப்பில் துணை மின் நிலையம் அமையும்பட்சத்தில் அதன் பயனாக 2000 வீடுகள் மற்றும் 100 தொழில் நிறுவனங்கள் ஆகியவை பயன்பெறும் என்றால் இல்லை. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தவறாக இவ்வழக்கை தாக்கல் செய்து வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலமானது வாதியால் அவரது வழக்கறிஞர் மூலம் தயார் செய்யப்பட்டு பின்பு நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு புறம் பற்றி எதுவும் தெரியாமல் நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.